Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 266/**2019**
**Depostitions of PW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | **சேக்அலி** |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of October 2023

Signature of Witness.

05.10.2023

1 ம் எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கோட்டை வல்லத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1 ம் எதிரி பரமசிவம் தெரியும். நான் திருவில்லிபுத்தூர் ரகமத்துல்லா ஹோட்டல் நடத்தி வந்தேன். அப்போது எதிரிகள் 4 பேரும் சாப்பிடுவதற்காக வந்தார்கள். தேதி மாதம் நியாபகம் இல்லை. 5, 6 வருடம் இருக்கும். அப்போது அவர்களுக்குள் சின்ன வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அவர்கள் செய்து வைத்திருந்த பிரியாணி பாத்திரங்கள் அனைத்தையும் கீழே தள்ளிவிட்டு அவர்களை தடுக்கப்போன செய்யது அலி

பாதுஷா , நானும் தடுத்தபோது போலீஸ் வந்தால் இதை சொல்லக்கூடாதென்று மிரட்டினார்கள். நான் அதையும் மீறி போலிசாரிடம் புகார் கொடுத்தேன். எதிரிகள் சேதப்படுத்திய பிரியாணியின் மதிப்பு ரூ.5000/- இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.
**(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.